ஏர் 9 • உழவு 12 • திருவள்ளுவர் ஆண்டு 2055
விலை ரூ.20/- • டிசம்பர் 2024 (கார்த்திகை - மார்கழி)

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

பதிவு எண். : 44/2016

பதிப்பாளர் :
கொங்கு நண்பர்கள் சங்கம். வெள்ளி விழா இல்லம்,
எண் : 34, சீனிவாசப் பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை– 600 014. செல் : 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com
இணையதளம் : www.kongunanbargalsangam.com

| | | |
|---|---|---|
| தலைவர் | : | வீ.க.செல்வக்குமார் |
| துணைத்தலைவர்கள் | : | ஆர்.சண்முகவேல் |
| | : | வி.பி.வீரப்பன் |
| செயலாளர் | : | எம்.அமராபதி |
| பொருளாளர் | : | சி.கொங்குவேள் |
| இணைச்செயலாளர்கள் | : | சி.அரவிந்தன் |
| | : | பி.ரவி |

**செயற்குழு உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| V.R.பாலசுப்பிரமணியன் | A.நடராஜன் |
| அருள்பொன்னுசாமி | S.ஜெகநாதன் |
| S.அன்பழகன் | K.நித்தியானந்தன் |
| K.ஜெகதீசன் | விசா M.சண்முகம் |
| S.சீனிவாசன் | S.குணசேகரன் |
| N.P.இசையழகன் | T.P.நடராஜன் |
| R.கந்தகார்த்திக் | D.M.சிவபிரகாசம் |
| G.கதிர்வேல் | பரமேஷ்வரி சின்னசாமி |
| K.G.ஜோதீஷ்குமார் | G.சண்முகப்பிரியா |

**Published & Edited by :**
K.K.Ramesh on behalf of
Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam,
No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street,
Royapettah, Chennai - 600 014.

**Printed by** :
M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah,
Chennai - 600 014.



மாவீரன் தீரன் சின்னமலை

## ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலையங்கம்

அன்பார்ந்த சொந்தங்களுக்கு, வணக்கம் !

நலம். நலம் பல விழைகிறேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு செயலர் பொறுப்பில் இருந்த பொழுது தங்கள் அனைவரையும் கடிதம் வாயிலாகச் சந்தித்தேன். மீண்டும் தற்போது தங்களை இம் மடல் வாயிலாகத் தொடர்பு கொள்வதில் பெரு மகிழ்ச்சி எய்துகிறேன்.

கடந்த அக்டோபர் 06, 2024 அன்று நடந்த நமது பொதுக்குழுவில் எனது தலைமையில் 2024-2026 ஆம் ஆண்டிற்கான நிர்வாகக்குழு, செயற்குழு உறுப்பினர்களை ஏகமனதாகத் தேர்வு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே மின்னொடு
வானம் தண்துளி தலைஇ யானாது
கல்பொழுது மிரங்கு மல்லல் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

- கணியன் பூங்குன்றனார்
(புறநானூறு 192)

எல்லா ஊரும் நம் ஊரே : எல்லா மக்களும் நம் உறவினரே! தீமையும், நன்மையும் பிறரால் வருவதில்லை என்பதை உணர்ந்தால் சக மனிதர்களிடம் விருப்பு, வெறுப்பற்ற சமநிலை சார்ந்த வாழ்வு கிட்டும். துன்பமும், ஆறுதலும் கூட மற்றவர் தருவதில்லை. சாதல் ஒன்றும் புதுமையில்லை. பிறந்த நாள் ஒன்று உண்டெனில் இறக்கும் நாள் ஒன்று என்று உண்டு. இறப்பு புதியதென்பதுமில்லை என்பதை உணர்ந்து வாழ்ந்தால், வாழ்க்கையை இரசிக்கலாம். இந்த வாழ்க்கையில் எவருக்கு எப்போது, என்ன நிகழும் என்று தெரியாது, இந்த வாழ்க்கை நிலையற்றது. அதனால் இன்பம் வந்தால் மிக்க மகிழவும் வேண்டாம், துன்பம் வந்தால் துவண்டு போய் வாழ்க்கையை வெறுக்கவும் வேண்டாம். வாழ்க்கையின் இயல்பை உணர்ந்து இயல்பாய் வாழ்வோம். இந்த வானம் நெருப்பாய் மின்னலையும் தருகிறது, மழையையும் தருகிறது. இயற்கை வழியில் அதது, அதன்பணியைச் செய்கிறது. ஆற்று வெள்ளத்தில் கற்களோடு அடித்து முட்டிச் செல்லும் படகுபோல, வாழ்க்கையும் ஊழின் வழியில் சென்று கொண்டிருக்கும், இது இயல்பு என மனத்தெளிவு கொள்ளல் வேண்டும்.

இந்தத் தெளிவு பெற்றால், பெரிய நிலையிலுள்ள பெரியவர்களையும் பார்த்து வியந்து பாராட்டவும் வேண்டாம், சிறியவர்களைப் பார்த்து இகழ்ந்து ஏளனம் செய்யவும் வேண்டாம்.

இதைவிட வேறு எவர் வாழ்க்கைத் தத்துவத்தை சொல்லிவிட இயலும், இதை உணர்ந்து உவப்பு, காய்த்தல் இன்றி நமது சங்கமும் வரும் நாட்களில் பீடு நடைபோடும் என்ற உறுதியினைக் கூறிக்கொள்கிறேன்.

அனைவக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு 2025 தைத்திங்களில் பிறக்கும் திருவள்ளுவராண்டு 2056 நல்வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

நன்றி



அன்புடன்,
**வீ.க.செல்வக்குமார்**
தலைவர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்...

இந்த ஆங்கிலப் புத்தாண்டு 2025–ன் முதல் இதழ் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி!!

புதிய நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டு புத்துணர்வோடு உங்கள் மேலான ஒத்துழைப்புடன் பணியாற்றத் தயாராக உள்ளோம் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்!!

சங்கத்தின் அன்றாட கணக்கு,வழக்குகளை நிர்வகிக்க புதிய தணிக்கையாளரை நியமித்திருக்கிறோம் (Internal Auditor). மேலும் அனைத்து பண பரிவர்த்தனைகளும் இணையவழி நடைபெற ஏற்பாடுகள் செய்துள்ளோம். சங்கத்தின் ஆடவர் மற்றும் மகளிர் விடுதிகளான கொங்குநாடு இல்லம்,வெள்ளிவிழா இல்லம் மற்றும் தீரன் சின்னமலை மாளிகையின் தங்கும் வசதிகள் மேம்படுத்தப்பட்டு புதுப் பொலிவுடன் செயல்படுகின்றன என்கின்ற மகிழ்வான செய்தியையும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சங்கத்தின் சார்பாக பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ் இருக்கை நிறுவத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களது மகனும்,நமது சங்கத்தின் பொருளாளருமான திரு.கொங்குவேள் அவர்களின் இல்லத் திருமணம் சேலத்தில் சிறப்புற நடைபெற்றது.நமது சங்கத்தின் உறுப்பினர்கள் இந்த இனிய வைபவத்தில் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்!!

நம் கொங்கு சமுதாய சான்றோரின் நீடித்த புகழையும், பணிகளையும் நம் இளம் தலைமுறையினர் அவசியம் அறிந்து கொள்ளும் வண்ணம் பெற்றோர்கள் தக்க முயற்சியெடுக்க வேண்டும் என இத்தருணத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்!!

வேளாண்மை நமது மக்களின் உயிர் நாடி!

கால்நடைகளும்,நமது வேளாண்மையும் நம் வாழ்வியலோடு ஆண்டுக் கணக்காகப் பின்னிப் பிணைந்தவை!!

நன்மாரி பெய்து வறட்சி நீங்கி நம் வேளாண் தொழில் சிறக்கவும்,எல்லா வளங்களும் பெற்று நீடித்த மகிழ்ச்சி நிலவவும் இறைவனை வணங்குகிறேன்!!

அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்!!

நன்றி



அன்புடன்,
**எம்.அமராபதி,** செயலாளர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்





# சென்னை கொங்குநாடு அறக்கட்டளை நடத்தும்

35 ஆம் ஆண்டு விழா

## சான்றோர்களுக்கு விருது வழங்கும் விழா
## மற்றும் மாணாக்கர்களுக்கு
## கல்வி உதவித்தொகை வழங்கும் விழா

# அழைப்பிதழ்

அரூர் **என்.என்.மஹாலில்** நடைபெறும் இவ்விழாவில் தாங்கள்
கலந்துகொண்டு சிறப்பிக்க அன்புடன் அழைக்கின்றோம்

நாள் : 05-01-2025, ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

வரவேற்புரை
திரு. **கே.ஆர்.அப்பாவு**
தலைவர் - கொங்குநாடு அறக்கட்டளை

முன்னிலை
உயர்திரு. **முத்து ராமசாமி**
தலைவர் - அம்மன் கிரானைட்ஸ்

வாழ்த்துரை
டாக்டர் **ம.மாணிக்கம்**
தலைவர் - சக்தி குழுமம்

தலைமை
உயர்திரு. **பி.பாலசுப்ரமணியன்**
தலைவர் - திரிவேணி குழுமம்

வாழ்த்துரை

திரு. **வ.முல்லைவேந்தன்**
முன்னாள் அமைச்சர்

முனைவர் **பி.பழனியப்பன்**
முன்னாள் அமைச்சர்

திரு. **கே.பி.அன்பழகன்** MLA
முன்னாள் அமைச்சர்

திரு. **தே.மதியழகன்** MLA
பருகூர் சட்டமன்றத் தொகுதி

செயலாளர் அறிக்கை
திரு. **சி.அரவிந்தன்**
செயலாளர் - கொங்குநாடு அறக்கட்டளை

நன்றியுரை
திரு. **வீ.க.செல்வக்குமார்**
பொருளாளர் - கொங்குநாடு அறக்கட்டளை

## விருதுகள்

### ‘அருட்செல்வர் விருது’

தொழில் துறை
திரு. **இரா.அஸ்வின் முத்து**
அம்மன் கிரானைட்ஸ்

சமூக சேவை
திரு. **ஜி.கே.மணி**
சட்டமன்ற உறுப்பினர் - பென்னாகரம் தொகுதி

இலக்கியத்துறை
எழுத்தாளர் **தேவிபாரதி**
சாகித்திய அகாதெமி விருதாளர்

### ‘தீரன் சின்னமலை விருது’

திரு. **வே.சந்திரசேகரன்**
தலைவர் - வித்யா மந்திர் கல்வி நிறுவனங்கள்

### ‘கொங்குவேள் விருது’

திரு. **ஜி.அசோகன்**
கொங்கு சமுதாய பணி

### ‘காலிங்கராயன் விருது’

திரு. **தே.உதயகுமார்**
அமுதம் புரூட் புராடெக்ஸ்

திரு. **இ.ஆர்.செல்வராஜ்**
தலைவர் - இ.ஆர்.கே.கல்வி நிறுவனங்கள்

திரு. **ஜி.வி.பிரகாசம்**
வழக்கறிஞர்

### ‘டாக்டர் சுப்பராயன் விருது’

திரு. **க.தனசேகர்**
செயலாளர் - செந்தில் பப்ளிக் ஸ்கூல்

### ‘கே.பி.சுந்தராம்பாள் விருது’

திருமதி. **எம்.எஸ்.சாமுண்டீஸ்வரி**
தாளாளர் - நாளந்தா கல்வி நிறுவனங்கள்

### ‘பாரத ரத்னா சி.சுப்ரமணியம் விருது’

திரு. **கொ.பாண்டுரங்கன்**
நிறுவனர் - வெண் ஒளி நலம் காண் அறக்கட்டளை

திரு. **மு.சந்திரசேகரன்**
சமுதாய பணி

**நிகழ்ச்சி நிரல்**
காலை 8.00 மணி முதல் கலைநிகழ்ச்சிகள் (கொங்குநாடு கலைக்குழு - வள்ளிகும்மி)
நமது சமுதாயத்தின் அருமைக்காரர்களை அழைத்து கௌரவித்தல் நிகழ்வு
மதியம் 2.00 மணியளவில் வரன் (மணமகன் / மணமகள்) தேர்வு செய்யும் அறிமுக நிகழ்வு

# 2024-2026 ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாகக் குழு



திரு. **வி.கே.செல்வக்குமார்**
தலைவர், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

ஈரோடு மாநகர் வீரப்பன் சத்திரம் இவரது சொந்த ஊர். 1962 ஆம் ஆண்டு திரு.என்.கருப்பண்ணன் - திருமதி. சம்பூரணம் தம்பதியருக்கு மூத்த புதல்வனாகப் பிறந்தவர். பயிரன் குலம், இவரது மனைவி திருமதி கீதா, நமது சங்கத்தை ஆரம்பித்த முன்னோடிகளுள் ஒருவரான திரு.சி.ஈசுவரமூர்த்தி (பணி நிறைவு இணைச்செயலர், தமிழக அரசு) அவர்களின் புதல்வி ஆவார். இவரது மூத்த மகன் சக்திக்குமரன் NIFT தரமணியில் B.Des. (Fashion Com) முடித்தவர். இளைய மகன் திரு.இளம்பரிதி ஜெர்மனியில் Ph.D., வேதியியல் பயின்று வருகிறார்.

வேதியியலில் இளம் அறிவியல் பட்டமும், சுற்றுச்சூழலில் முது அறிவியல் பட்டமும் பெற்றவர். சென்னையில் 1984 ஆம் ஆண்டு உலோக அலோகங்களைப் பரிசோதனை செய்து சான்றளிக்கும் ஆய்வுக்கூடத்தைச் சிறிய அளவில் தொடங்கி, இன்று சென்னை, கிண்டியில் ISO/IEC:17025:2017 சான்றிதழின்படி இந்திய அரசின் என்.ஏ.பி.எல் அமைப்பின் அங்கீகாரம் பெற்ற, அகில இந்தியஅளவில் சிறந்ததொரு தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடமாக நடத்தி வருகிறார். அடைக்கப்பட்ட குடிநீர்ப் பரிசோதனையில் இவரது நிறுவனம் இந்தியத்தர நிர்ணய ஆணையத்தின் (BIS) ஒப்புதலும், உணவுப் பரிசோனையில் இந்திய உணவுப் பாதுகாப்புத் தரக்கட்டுப்பாட்டு ஆணையத்தின் (FSSAI) அத்தாட்சியும், சுற்றுச்சூழல் பரிசோதனையில் இந்தியச் சுற்றுச்சூழல் மாசுக்கட்டுப்பாட்டு அமைச்சகத்தின் (MOEF) அங்கீகாரமும், விளைபொருட்கள், கடல்சார் உணவுப்பொருட்கள் ஏற்றுமதிக்குச் சான்றளிக்க APEDA, EIC பிரிட்டனின் GAFTA அங்கீகாரமும், தேயிலைக்கு TEA Board எண்ணெய் வித்துகளுக்கு IOPEPC அங்கீகாரமும் பெற்ற ஆய்வுக்கூடமாகத் திகழ்ந்து வருகிறது.

மேலும் ரெயில்வே துறை, ஹுண்டாய், போர்டு, நிசான் போன்ற ஆட்டோமொபைல் நிறுவனங்களுக்கும், பெல், எல் அண்ட் டி, அணுமின் நிலையம் போன்ற நிறுவனங்களுக்கு உதிரிப்பாகங்கள் அனுப்பும் பல தொழில் நிறுவனங்களும் இவரது ஆய்வுக்கூடத்தில் பரிசோதனை செய்து சான்று பெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தகுந்தது.

தங்கத்திற்கு ஹால்மார்க் தரக்கட்டுப்பாடு வழங்கும் ஆய்வுக்கூடங்களுக்கு, தங்கத்தின் 999.9 தூய்மையைச் சோதித்து சான்றளிப்பதில், இந்திய அளவில் முதன்மை ஆய்வகமாக இவரது ஆய்வுக்கூடம் விளங்கி வருகிறது. 1987 ஆம் ஆண்டு திரு.டி.கே.சுப்ரமணியன் அவர்கள் மூலம் சங்க உறுப்பினரான இவர், சற்றொப்ப 25 ஆண்டுகளுக்கு முன்னர் சங்கத்தின் இணைச்செயலர் ஆகவும், பொருளாளர் ஆகவும் சிறப்பாகப் பணி புரிந்தவர், அக்டோர் 2016 முதல் டிசம்பர் 2020 வரை சங்கத்தின் செயலாளராகச் சிறப்பாகப் பணியாற்றியவர். சங்கத்தின் பத்மபூசன் ம.ப.பெரியசாமித் தூரன் நூலகம் இவரது நன்கொடையால் அமைக்கப்பட்டது. தற்போது சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

த.ஸ்டாலின் குணசேகரன் தலைமையில் சமூகப்பணிகளாற்றி வரும் ஈரோடு மக்கள் சிந்தனை பேரவையிலும் உறுப்பினராக உள்ளார். சென்னை கொங்கு நாடு அறக்கட்டளையின் பொருளாளர் பொறுப்பு வகித்து வருகிறார்.

### திரு. **ஆர்.சண்முகவேல்,** துணைத்தலைவர்



திரு.ஆர். சண்முகவேல், 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தொடர்ந்து சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக மிகச்சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் அருகில் சக்கரைக்காட்டில் 1970ஆம் ஆண்டு திரு.பி.ரங்கசாமி கவுண்டர் - திருமதி. ராஜம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். விழியன் கூட்டத்தைச் சேர்ந்தவர். பி.காம் பட்டதாரியான இவர் சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் சன் பிரைட் குழும நிறுவனங்களை இவரது சகோதரர் திரு.ஆர்.கணேசனுடன் இணைந்து தொடங்கி எம்பிராய்டரி மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரிப்பில் ஈடுபட்டு வந்துள்ளார். அதன் பின் அந்த நிறுவனங்களை மேலும் விரிவுபடுத்தி சன் பிரைட் இண்டஸ்ட்ரீஸ் குழுமம் என்று உருவாக்கி உலகளாவிய Agri Process & Services and Agro Exports Business ஐ மிகச் சிறப்பாக செய்து வருகிறார்.

சமுதாய உணர்வு மிக்க இவர், சங்கத்தின் செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். எண்டர்ப்ரைஸிங் எலைட்ஸ் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்று மிகச்சிறப்பாக தன் கடமையை நிறைவேற்றினார்.

இவருடைய மனைவி திருமதி. ஷோபிலா இத்தம்பதியருக்கு பூர்வர்ஷா (முதுகலை பட்டதாரி) என்ற மகளும் மோனிஷ் (இளங்கலை பட்டதாரி) என்ற மகனும் உள்ளனர். சங்க வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வருகிறார். தற்போது சங்கத்தின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### திரு. **வி.பி.வீரப்பன்,** துணைத்தலைவர்




2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயல்பட்டவர். 2012 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை எட்டு ஆண்டுகளாக, இணைச்செயலாளராகப் பொறுப்பேற்று, சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவியவர். நாமக்கல் நகரில் 1950 ஆம் ஆண்டு திரு.பழனியாண்டி கவுண்டர் - திருமதி செங்கம்மாள் தம்பதியரின் மகனாகப் பிறந்த இவர், முத்தன் கூட்டத்தைச் சேர்ந்தவர். பல ஆண்டுகளாக லாரிப் போக்குவரத்துத் தொழில் நடத்தி வருகிறார். கொங்குச் சமுதாய வளர்ச்சியில் தீவிர ஈடுபாடு கொண்டு செயல்பட்டு வருகிறார். சங்கப்பணிகளில் மிகுந்த ஈடுபாடு, அயரா உழைப்பு, இன்சொல் முதலான பண்புகள் கொண்டுள்ளவர். இவருடைய மனைவி திருமதி வீ.லீலா. இத்தம்பதியருக்கு கவிதா, ரேவதி என இரண்டு மகள்கள் உள்ளன. கவிதாவின் கணவர் திரு.எஸ்.செந்தில்குமார்; ரேவதியின் கணவர் திரு.என்.மகேஸ்வரன். திரு. வி.பி.வீரப்பன் தற்போது மீண்டும் சங்கத்தின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

### திரு. **எம்.அமராபதி,** செயலாளர்



திரு.எம்.அமராபதி 2010 முதல் 2014 வரை சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும்,2014 முதல் 2016 வரை இணைச் செயலாளராகவும்,அதன் பின் நான்கு ஆண்டுகள் 2020 வரை பொருளாளராகவும் சீரிய பணியாற்றினார்.2020 முதல் 2024 வரை சங்கத்தின் செயலாளராகப் பொறுப்பு வகித்தார்.அவிநாசியைச் சேர்ந்த மூத்த வழக்கறிஞர் திரு.கே. மருதாசலம் – திருமதி ருக்மணி தம்பதியருக்கு மகனாகப்பிறந்த இவர் தூரன் குலத்தைச் சேர்ந்தவர்.இவரின் தந்தை திருப்பூர் வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றியவர்.அவிநாசி வழக்கறிஞர்கள் சங்கத் தலைவராகத் தொடர்ச்சியாக 32 ஆண்டுகள் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு.திரு.அமராபதி கிண்டி தொழிற்பேட்டையில் 1996 ஆம் ஆண்டு முதல் ஜெயராம் ஹை டெக் புராடக்ட்ஸ் என்னும் நிறுவனத்தை நடத்தி வருகிறார். இவரது மனைவி திருமதி.உமா மகேஸ்வரி சென்னை SDNB வைஷ்ணவ் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். நான்கு வருடங்களாக புத்தக வாசகர்கள் குழுவினை நடத்தி வருகிறார்.இத் தம்பதியினரின் மகள் தன்வி கோவை PSG தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாமாண்டு படித்து வருகிறார். சங்க வளர்ச்சி பணிகளில் தீவிர ஈடுபாடு கொண்ட திரு.எம்.அமராபதி தற்போது மீண்டும் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு. **சி.கொங்குவேள்,** பொருளாளர்



நாமக்கல் மாவட்டம் சிவியாம்பாளையம் தமிழ் கூறு நல்லுகத்திற்குக் கொடுத்த கொடை, வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் - திருமதி.செல்லம்மாள் ஆகியோரின் மகனாக 1962 ஆம் ஆண்டு பிறந்தவர், செ.கொங்குவேள், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் B.Com., பட்டம் பெற்ற இவர், நிர்வாகம் மற்றும் கட்டட இயலில் சிறப்புப் பயிற்சி பெற்றுத் தன்னுடைய திறமையைப் பெருமளவில் வளர்த்துக்கொண்டார். கண்ணந்தை கூட்டத்தைச் சேர்ந்த இவர், சமுதாயப் பற்றும் தமிழ்ப் பற்றும் மிக்க ஆற்றலாளர்.

கொங்குமாமணி டாக்டர் பழனி ஜி.பெரியசாமி அவர்களின் தலைமையில் இயங்கும் பி.ஜி.பி.குழும நிறுவனத்தில் பணியில் சேர்ந்து, தன்னுடைய அயரா உழைப்பாலும், செயலாற்றலாலும் பதவி உயர்வுகள் பெற்றுத் தற்போது மேலாண்மை இயக்குனராக (Managing Director) மிகச் சிறப்பாச் செயல்பட்டு வருகிறார். Enterprising Elites அமைப்பின் செயலாளராக சிறப்பாக செயல்பட்டார். சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளையின் தலைவர், பாவேந்தன் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலர் உள்ளிட்ட பொறுப்புகளையேற்றுச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். அறக்கட்டளை சார்பில் சிலப்பதிகார மாநாடுகளையும், தந்தையின் பிறந்த நாள் அன்று இலக்கிய விழாக்கள் மற்றும் இலக்கிய விருதுகள் வழங்கி சிறப்பாக செயல்நடத்தி வருகிறார். அறக்கட்டளையின் சார்பில் நாமக்கல்லில் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களது சிலை வைக்க தனிஇடம் ஒதுக்கப்பட்டு அச்சிலையை அமைத்து அச்சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்கள்.

இவரது மனைவி டாக்டர் ஈஸ்வரி MBBS., DCH முடித்து சென்னையில் குழந்தைகள் நல மருத்துவராய்ச் சேவையாற்றி வருகிறார். இத்தம்பதியருக்கு யாழினி, அமுதினி என இரு மகள்கள் உள்ளனர். யாழினி B.E., M.S (USA) பட்டங்கள் பெற்றுத் தற்போது அமெரிக்காவில் பணி புரிகிறார். அமுதினி B.E. (Civil) M.S. அமெரிக்காவில் Construction Management பட்டம் பெற்று தற்போது அமெரிக்காவில் பணிபுரிந்து வருகிறார். கடந்த டிசம்பர் 5ம் தேதியன்று இவரது மூத்த மகள் யாழினி மற்றும் பொள்ளாச்சி திரு.கி.ஆறுமுகம் கவுண்டர் – திருமதி. ஆ.முத்துலட்சுமி அவர்களது பேரனும் திரு.செல்வக்குமார் – திருமதி. அகிலாண்டேஸ்வரி ஆகியோரது குமாரனுமான சிவேஷ் செல்வக்குமார் அவர்களது திருமணம் சேலம் வரலட்சுமி மஹாலில் சிறப்பாக நடைப்பெற்றது. மணமகன் திரு. சிவேஷ் செல்வகுமார் அவர்கள் அமெரிக்காவில் APPLE நிறுவனத்தில் Design Engineer ஆக பணிபுரிகிறார். திரு.சி.கொங்குவேள் அனைவரையும் அன்பொழுக அழைத்து தேவையறிந்து சேவை செய்யும் பண்பாளர் தற்பொழுது பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



# இயற்கையின் பாதையில்

அ.பாலசுப்ரமணியன், ஈரோடு

நமது இந்திய மாநிலங்கள் அனைத்தும் விவசாயம் சார்ந்ததையே என்று ஆணித்தரமாகச் சொல்லலாமல்லவா? ஏனென்றால் ஒவ்வொரு மாநிலத்திலும் பெரும்பாலான தொழில் என்பது பண்டைக் காலந்தொட்டே விவசாயமாகத்தான் இருந்திருக்கின்றது. காட்டைக் கண்ட ஆதிமனிதன் பற்றாக்குறை உணவிற்கு என்று வந்தபொழுது, காடுகொடுக்கும் விளைச்சலாம் இலை தழை, காய், கனி வகைகளை ஏன் நாம் செடி நட்டுப் பயிரிட்டு அதிகம் பெறக்கூடாது என்று சிந்தித்த பொழுதுதான், விவசாயம் என்ற துறை தொடக்கமாயிற்று என்றும் சொல்லலாம்.

### இயற்கைத் தண்ணீர், இனிய விளைச்சல் :

சில மாநிலங்கள் வற்றாத நதி. வளம், வான்போற்றும் மழைவளம், குற்றமில்லா மண் வளம் போன்றவைகளைப் பெற்று நெல் கோதுமை மற்றும் பல தானிய விளைச்சலில் முன்னிடத்தையும் பெற்றுத் திகழ்கின்றன. மேலும், சில மாநிலங்களின் மலைப்பிரதேச சாகுபடியில் இருந்து நமக்கு முட்டைகோஸ் காரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு, பீன்ஸ் வகைகள் மற்றும் காபி, டீ, கோகோ போன்றவற்றோடு வாசனை திரவியங்களும் பல மருந்துச் செடிகொடி கிழங்கு வகைகளும் கிடைக்கின்றன. சில பிரதேசங்களில் இருந்து, மலை வாழை, மா, பலா மற்றும் இதர அயல்நாட்டு இனப்பழ வகைகளும் பயிரிடப்பட்டுக் கிடைக்கப் பெறுகின்றன. மழை, நதிநீர் போன்றவைகள் மாசுபடாமல் இருந்தவரை நன்னிலங்கள் மண்வளத்தோடு இனிய விளைச்சலையும், சுவைபெற்ற காய்கனி, கிழங்கு வகைகளையும் இனிதே விளைவித்தன.

### இயற்கை மண் மற்றும் உரம் :

மலைப் பிரதேசங்கள் அவை ஒட்டிய சமவெளிப்பகுதிகள் போன்றவற்றில் இன்றும் ஓரளவு, மண்வளம் பாதிக்கப்படாமல் இருக்கின்றது. அதனால்தான் விளைச்சல் என்று பார்க்கும் பொழுது, காபி, தேயிலை மற்றும் காரட், கோஸ், உருளைக் கிழங்கு, மலைப்பூண்டு போன்றவற்றின் தரமும், அளவும், தகுதியும் நன்றாக அமைந்து விவசாயம் (மலைப் பயிர்களெல்லாம் பார்க்கும்பொழுது) செழிப்பாக உள்ளது. மலையோரங்களில், காய்கறி வகைகள் நல்ல விளைச்சலைத் தருகின்றன. இதற்கு முக்கியக்

காரணம், இயற்கை மண்ணில் காடுகளின் மரங்களிலிருந்து விழும் இலைகள் மட்கிப்போய் வண்டல் கலந்த தோட்டமண்ணை உயிரூட்டமுள்ள நுண்ணுயிர்கள் நிறைந்த இயற்கை உரக் களஞ்சியமாகக் காத்து வருகின்றன. அங்கே அளவான மழையினால் மட்டும் இலைசெடிகளும், அடித்து வரப்பட்டுச் சமவெளிகளில் பாயும் தண்ணீரும் உரம் கலந்திட்ட நுண்ணுயிரூட்டங்களாக உள்ளன. அங்கு நிலவும் தட்பவெப்பமும் தாவர வளர்ச்சி ஊக்கிகளாகச் செயல்பட்டுப் பயிர் வளர்ச்சிக்கு உதவுகின்றன அங்கேயும் நடக்கும் மாறுதலென இரசாயண உரமிடப்பட்ட காய்கறிமுதல் அனைத்தும் சமவெளிப்பகுதிக்குப் பெருமளவில் விற்பனைக்கு வரும்பொழுது கெட்டு அழுகி விடுகின்றன.

## இயற்கை விவசாயிகள் :

சமவெளிப் பகுதிகளிலும், பலர் இயற்கை விவசாயம் செய்யும் முகமாக, பெரிய பரப்புடன் பயனற்றுக் கிடக்கும் நிலங்களை விலைக்கு வாங்கி, மண்பரிசோதனை மூலம் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தப் பயிர்கள் மற்றும் மரஞ்செடிகொடிகள் மற்றும் மருந்துப் பயிர்கள் ஒத்துவரும் என்று பார்த்து, அந்தந்த வெளிகளில் ஒரே பண்ணையில் பலபயிர்களைப் பயிரிட்டு வருடம் முழுவதும் வருமானம் வரும்படி, உள்ளே கோழி மற்றும் மீன் பண்ணைகள் போன்றும் அமைத்துப் பண்ணையம் செய்து வருகின்றனர். மேலும் அவர்கள் பண்ணைகளில் கிடைக்கும் இயற்கை உரங்களை மட்டுமே உபயோகித்தும் வருகின்றனர். வீரிய ஒட்டு இரங்களைத் தவிர்த்து, நாட்டு இரகங்களிலேயே அதிக நாட்டம் கொண்டு பல பயிர்ப் பண்ணைகளை நாம் காணும் பொழுது அவ்வாறு அமைக்கும் கணினி அறிவியல் துறை இளைஞர்கள் தங்கள் வேலைகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் விட்டுவிட்டு வந்து இயற்கை விவசாயம் காக்கும் இளைஞர்களாகத் தமிழகத்தில் இருப்பது தமிழனுக்கு மிகப்பெருமை. கணவன் மனைவியாக விவசாயத் துறையில் அதுவும் இயற்கை விவசாயத்தில் ஈடுபட்ட பின்னர், வெளிசமூகத்தினருடன் தொடர்பு கொண்டு நோயின்றி மிக மகிழ்ச்சியாக இருப்பது பெருமை அளிக்கின்றது. இவர்களைப் போன்றவர்களாலேயே இனி இயற்கைப் பாரம்பரிய விவசாயம் எழுச்சி பெறும்.



## இயற்கை அங்காடிகள் :

இயற்கை விவசாயம் செய்பவர்களின் விற்பனை மையமென, அவரவர்களே சிறப்பான அங்காடிகளைச் சில சமூக ஆர்வலர்கள் அல்லது அமைப்புகளின் துணையுடன் ஏற்படுத்தி, இயற்கைக் காய்கறி இரகங்கள், பழங்கள், விதைகள், மருந்துப் பொருட்கள் என விற்பனை செய்தும், மதிப்புக் கூட்டப்பட்ட மரச்செக்கு எண்ணெய் போன்ற கலப்படமில்லா எண்ணெய் இரகங்கள், போற்றப்படும் வகையில் செய்யப்பட்ட இயற்கைக் கலைப்பொருட்களையும் உருவாக்கி விற்பனைச்செய்யும் சில எழுச்சிமிக்க இளைஞர்களைத் தமிழகம் இயற்கை விஞ்ஞானிகளாக உருவாக்கி நிற்கின்றது.

## ஓ இயற்கைக் கொங்கு விஞ்ஞானிகளே!

கார் ஏற்றுஞ் சாலைப்பக்கம்
  கலப்பைநுகந் தோன்றுதய்ய!
நீரேற்றுக் கிணறு வெட்டி
  நித்தம் நித்தம் ஊற்றமய்யா!
தாரேற்றும் பரணிலெல்லாம்
  தரமிகுந்த காய்கறிகள்!
சீரேற்கும் மணவேளையெங்கும்
  சிறப்புமிகு இயற்க யன்னம்
காரேற்றிக் கம்பும் ராகி கவின் மிகுந்த
  சோலை யெல்லாம்
பாரேற்றிப் பண்புடனே பணம் பார்க்க
  நுண்ணறிவு மக்கள்
ஊரேற்றிச் செழுமை கண்டு
  உயர்ந்து நல்லா நிற்பனரே!



### என்றும் நலமுடன் வாழ...

# குளிரைச் சமாளிப்பது எப்படி?

கொங்குமாமணி பத்மஸ்ரீ **டாக்டர் வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர், சென்னை

- ❖ முடிந்த அளவிற்கு வீட்டிலேயே உணவை உண்ண வேண்டும்
- ❖ கொதிக்க வைத்து, ஆற வைத்த தண்ணீரையே வீட்டிலேயும், வெளியிலேயும் குடிக்க வேண்டும்
- ❖ இருமல், சளி வர வாய்ப்பு அதிகமுள்ளதால், அவசியமில்லாமல் வெளியே செல்ல வேண்டாம்
- ❖ அவசியம் ஃபுளூ தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்
- ❖ ஆஸ்துமா நோயுள்ளவர்கள் தேவைப்பட்டால் காலம் தாழ்த்தாமல் இன்ஹேலரை உபயோகப்படுத்த வேண்டும்
- ❖ குளிரைக் குறைக்கும் கம்பளி ஆடைகளையே முடிந்தளவிற்கு உபயோகிக்க வேண்டும்
- ❖ தவறாமல் செய்யும் நடைப்பயிற்சி மிகவும் அவசியம்
- ❖ பக்கவாதம், உதறுவாதம் போன்ற நோய் உள்ளவர்களுக்கு இயன்முறை சிகிச்சை அவசியம்
- ❖ யோகா பயிற்சிகளைச் செய்ய வேண்டும்
- ❖ மலச்சிக்கல் வர வாய்ப்பு அதிகம். ஆகையால் அதற்கு நிவாரணம் பெற நிறைய பழங்கள், காய்கறிகளை எடுத்துக் கொள்ள வேண்டும்
- ❖ வெங்காயம், பீட்ரூட் மற்றும் பச்சைக் காய்கறிகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்
- ❖ தாகம் அதிகம் இருக்காது. ஆகையால் சுமார் 2– 3 லிட்டர் தண்ணீர் அருந்துவது அவசியம்.

- முடிந்தளவிற்கு காபி, டீயைக் குறைத்துக் கொண்டு சூடான சூப்பை அருந்தலாம்.
- வாரம் ஒருமுறை எண்ணெய் குளியல் தோலுக்கு நல்லது. தோல் வறட்சியை நீக்கும்.
- கொய்யா, மாதுளம் பழம் ஆகியவை குளிர்காலத்திற்கு ஏற்ற பழங்கள்.
- பிஸ்தா, பாதாம், முந்திரி போன்ற கொட்டை வகைகளை சற்று அதிகம் ஏடுத்துக் கொள்ள வேண்டும்.
- எண்ணெயில் பொரித்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

  மேற்கண்ட வழிமுறைகளை தவறாமல் கடைப்பிடித்தால் குளிரை எளிதாக சமாளித்து விடலாம்.
- குளிர் காலத்தில் பசி சற்று அதிகம் இருக்கும். அதனால் உடல் எடை அதிகரிக்க வாய்ப்புண்டு, உணவில் கவனம் தேவை.

## முதியோர் நலனில் சித்த மருத்துவம்’ நூல் வெளியீட்டு விழா




சித்த மருத்துவர் ஏஸ். ஆருள் சொரூபி அவர்கள் எழுதிய “முதியோர் நலனில் சித்த மருத்துவம்’ ஏன்ற நூலை மாண்புமிகு நீதியரசர் எஸ். இராஜேஸ்வரன், முன்னாள் நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றம் ஆவர்கள் முதல் பிரதியை வெளியிட பேராசிரியர் மருத்துவர் சரவணா தேவி, துணை முதல்வர், அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

சித்த மருத்துவ கல்லூரி துணை முதல்வர் பேராசிரியர் மருத்துவர் சரவணா தேவி, நூலாசிரியர் சித்த மருத்துவர் அருள் சொரூபி, முதியோர் நல மருத்துவர் பத்மஸ்ரீ வி.எஸ். நடராஜன், தியாகி லக்ஷ்மிகாந்தன் பாரதி மற்றும் திரு. சிவ.முருகன், மத்திய உள்துறை அமைச்சகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர் ஆகியோர் நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளைப் பற்றியும், நூலின் சிறப்பான வடிவமைப்பு பற்றியும் பாராட்டிப் பேசினார்கள்.

### திரு. **சி.அரவிந்தன்,** இணைச்செயலாளர் – 1



ஈரோடு மாவட்டம் கொளாநல்லி குட்டப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.ஆர்.சின்னசாமி - திருமதி.பரமேஸ்வரி தம்பதியரின் மகனாக 1982 ஆம் ஆண்டு பிறந்தவர், திரு.சி.அரவிந்தன். கண்ணன் குலத்தைச் சேர்ந்த இவருடைய குலதெய்வம் கொளாநல்லியிலுள்ள அருள்மிகு பொன் குழலியம்மன். இவரது மனைவி திருமதி ராஜலெட்சுமி. இத்தம்பதியருக்கு ஆதிகுமரன் என்ற மகனும், குழலினி என்ற மகளும் உள்ளனர். இருவரும் பாரதிய வித்யாபவன் பள்ளியில் படிக்கின்றனர். சென்னையில் K Labs என்னும் மென்பொருள் நிறுவனத்தை நடத்தி வருகிறார். தன்னுடைய மென்பொருள் நிறுவனத்தின் மூலம் சங்கத்தின் திருமணத் தகவல் மையத்திற்கு இணைய வழி மென்பொருளை நன்கொடையாக வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. Enterprising Elites அமைப்பின் துடிப்புமிக்க இளம் முன்னாள் செயலாளர் ஆவர்.

மாநில ஒன்றிய அரசு துறைகளுக்கு மென்பொருள் சேவைகளையாற்றி வருகிறார். இன்முகத்தோடு பழகும் இயல்பும் அனைவருக்கும் உதவும் பண்பும், விரைந்து செயலாற்றும் திறனும் ஒருங்கே பெற்றவர். த.ஸ்டாலின் குணசேகரன் தலைமையில் சமூகப் பணிகளாற்றி வரும் ஈரோடு மக்கள் சிந்தனை பேரவையிலும் உறுப்பினராக உள்ளார். சென்னை கொங்குநாடு அறக்கட்டளையின் செயலாளராக திறம்படப் பணியாற்றி வருகிறார்.

### திரு. **பி.ரவி,** இணைச்செயலாளர் – 2



திருச்செங்கோட்டைச் சேர்ந்த திரு. கே.பழனிசாமி– திருமதி சாந்தா தம்பதியருக்கு 1969 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்த இவர், மெக்கானிகல் இன்ஜினியரிங் டிப்ளமோ பெற்றவர். காடைக் கூட்டத்தை சேர்ந்தவர். திருச்செங்கோடு கொங்கு வேளாளர் இளைஞர் சங்கத்தின் தலைவராகப் பதினைந்து ஆண்டுகளாக ரிக் உரிமையாளர் சங்கத் துணைத்தலைவராக ஆறு ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்பட்டு வந்தார். இவர் திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தனாரீஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றியவர். இவர் திருச்செங்கோட்டில் போர்வெல் மற்றும் டிரான்ஸ்போர்ட், விவசாயம் தொழிலைச் செய்து வருகிறார். SKV கல்வி நிறுவனத்தின் தலைவராகவும், நாமக்கல் மேற்கு மாவட்ட பஸ் உரிமையாளர் சங்கத் தலைவராகவும், நாமக்கல் மாவட்ட அமைச்சூர் கபடி கழகத்தின் தலைவராகவும் உள்ளார். இவரது மனைவி திருமதி ஆர்.ஜெயந்தி. இத்தம்பதியருக்கு ஜெ.ஆர்.மதுரிதா என்னும் மகளும், ஜெ.ஆர்.சம்ரிஷ் என்ற மகனும் உள்ளனர். ஜெ.ஆர்.மதுரிதா M.B.B.S கார்த்திக் ராஜா அவர்களை மணமுடிந்தார். சமுதாயப் பற்றும், சங்க வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடும் கொண்டுள்ள இவர் 2024–2026ஆம் ஆண்டிற்கான இணைச்செயலராக பொறுப்பேற்று உள்ளார்.

# செயற்குழு உறுப்பினர்கள்

## திரு. வி.ஆர்.பாலசுப்பிரமணியன்



2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும்,

ஜனவரி 2021 முதல் அக்டோபர் 2024 வரை பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மீண்டும் அக்டோபர் 2024 முதல் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.V.R.பாலசுப்பிரமணியன் அவர்கள், ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர், வெள்ளாளபாளையம் கிராமத்தை பூர்வீகமாகக் கொண்டவர். திரு.M.இராமசாமி கவுண்டர் – திருமதி R.மாராத்தாள் தம்பதியருக்கு 1969 ம் ஆண்டு பிறந்தார். இவரது கூட்டம் ஆந்தை, குலதெய்வம் வெள்ளகோயில் வீரக்குமாரசுவாமி. இவரது மனைவி திருமதி B.தமிழ்செல்வி. இத்தம்பதியருக்கு B.சர்நிதா, BS.மிருதுவர்ஷினி என்னும் இரு மகள்கள் உள்ளனர். B.சர்நிதா தற்போது சவீதா பல்கலைக்கழகத்தில் B.B.A.,L.L.B., சட்டப் படிப்பை முடித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் 2024 ம் ஆண்டு வழக்கறிஞராகப் பதிவு செய்துள்ளார்.

இரண்டாவது மகள் BS. மிருதுவர்ஷினி, ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு B.Sc.,சைக்காலஜி படித்து வருகிறார். திரு,இசைபாலு சென்னை ESAI குழும நிறுவனங்களின் இயக்குநராக உள்ளார். Advocate and Labour Law Consultant ஆக தொழில் செய்து வருகிறார். சமுதாயப் பற்று மிக்க இவர் சங்கப்பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். தொடர்ந்து ஐந்து முறை செயற்குழு உறுப்பினராகவும், இரண்டு முறை பொருளாளராகவும் பணியாற்றியுள்ளார். தற்போது எட்டாவது முறையாக சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## திரு. அருள்பொன்னுசாமி



கோவை மாவட்டம், அன்னூர் வட்டம், கெம்பநாயக்கன்பாளையம் கிராமத்தில் தெய்வத்திரு. பொன்னுசாமி கவுண்டர் – சிரோன்மணி தம்பதியரின் மகனாக காடை குலத்தில் பிறந்தவர். குலதெய்வம் அருள்மிகு செல்வநாயகி அம்மன், பிள்ளையப்பன் பாளையம். இவருடைய மனைவி திருமதி.சர்மிளா தேவி கோவை மாவட்டம், விளாங்குறிச்சியைச் சார்ந்தவர்.

பள்ளிக் கல்வியை கிராமத்திலும் பொறியியல் கல்வியை சென்னையிலும் பயின்ற பின், சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.கே. பாலசுப்பிரமணியம் அவர்களிடம் பணியாற்றினார், அப்போது முதல் கொங்கு சமுதாயப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.


கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் மேலாண்மை கல்வி பயின்றவர். அப்போது அன்னூர் கொங்கு நண்பர்களை ஒன்றிணைத்து சங்கம் மற்றும் பேரவையின் செயல்பாடுகளை சிறப்பாக வழி நடத்தியவர். செயற்குழு உறுப்பினராக பணியாற்றியபோது கிண்டியில் உள்ள தீரன் சின்னமலை சிலையை சுற்றியுள்ள பகுதிகளை சுத்தமாக பராமரித்து மறு சீரமைத்ததில் முக்கிய பங்கு ஆற்றியவர்.

பேரவையின் சார்பில் நடைபெற்ற கோவை கருமத்தம்பட்டி மாநாட்டிலும் பின்னர் நடைபெற்ற பாராளுமன்ற சட்டமன்றத் தேர்தல்களிலும் போட்டியிட்ட நமது வேட்பாளர்களுக்கு சிறப்பாக தேர்தல் பணியாற்றியவர்.

சென்னை திருமுடிவாக்கத்தில் பொன்மணி இன்ஜினியர்ஸ் என்ற தொழில் நிறுவனத்தை நடத்தி வருகிறார். அந்தத் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் செயலாளராகவும், CAAIIUC என்ற குழுமத்தின் துணைத் தலைவராகவும் உள்ளார்.

கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பத்தாண்டு காலம் பணியாற்றியுள்ளார். தற்போது மீண்டும் செயற்குழுவிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## திரு. எஸ்.அன்பழகன்



தருமபுரி மாவட்டம், பொம்மிடி என்ற ஊரைச் சேர்ந்த திரு.P.செம்பராயகவுண்டர் - திருமதி. S.பார்வதி தம்பதியரின் இளைய மகனாக 1960 ஆம் ஆண்டு பிறந்தவர். இவரது அண்ணா டாக்டர் S.அசோகன் M.S. CEO., GEM Hospital, Chennai ஆவார். இவர் விழியன் குலத்தைச்சேர்ந்தவர். 1981 ஆம் ஆண்டு திருமதி. சந்திரலேகா அவர்களை மணமுடிந்தார். திரு.எஸ்.அன்பழகன் - திருமதி. சந்திரலேகா தம்பதியருக்கு Er.A.மதன் கார்த்திகேயன் Er.A.C.கவின் கார்த்திகேயன் என்ற இரு மகன்கள் உள்ளனர். இவர் தனது கல்லூரி படிப்பை முடித்துவிட்டு ஊரில் விவசாய தொழில் செய்து வந்தார். 2006 ஆம் ஆண்டு சென்னைக்கு குடிப்பெயர்ந்து கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட் செய்து வந்தார். தற்சமயம் சென்னையில் BISMARCK Agro Commodities Private Limited ன் Business Net Work Advisor ஆக இருந்து வருகிறார்.

மேலும் A unit of BISMARCK Group (India, Hongkong, UAE ஆகிய நாடுகளுக்கு) மயிலாப்பூரில் உள்ள Good Food Trader Private Limited நிறுவனத்தின் ஆலோசகராக பணிபுரிந்து வருகிறார். இவர் சமூக சேவைகளிலும் மிக ஈடுபாடு உள்ளவர். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 2008 ஆம் ஆண்டில் செயற்குழு உறுப்பினராக திகழ்ந்தார். தற்போது 2024-2026 ஆம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார்.

## திரு. கே.ஜெகதீசன்



நாமக்கல் மாவட்டம் குமரகவுண்டனூர் கிராமத்தில் திரு. கருப்பன் மற்றும் திருமதி. இராசம்மாள் தம்பதியருக்கு 1965 ஆம் ஆண்டு மகனாக பிறந்த இவர் கண்ணந்தை கூட்டத்தை சேர்ந்தவர்.

பொறியியல் பட்டதாரியான இவர் 1995 ஆம் ஆண்டு மருத்துவம் மற்றும் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தை தொடங்கினார்.தற்போது இவரது நிறுவனமான UNITECH GROUP OF COMPANIES மூன்று மாநிலங்களில் ஐந்து கிளைகளைக் கொண்டுள்ளது. இந்நிறுவனங்களை பொறியியல் பட்டதாரியான இவரது மனைவி சுமதி, பொறியியல் மற்றும் முதுகலை வணிக மேலாண்மை பட்டதாரிகளுக்கான இவர்களுடைய மகள் ஹேமப்பிரியாறு மற்றும் மருமகன் செந்தூர் குமரன் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள்.

தனது சொந்த கிராமத்தில் ஏழை குழந்தைகளின் படிப்பை உறுதி செய்ய பள்ளி ஒன்றினை நடத்தி வருகிறார். ஆதரவற்ற மாற்று திறனாளி பெண்கள் நல் வாழ்விற்காக புதுச்சேரியில் உள்ள ஜீவாலா ஹோம்ஸ் என்ற அமைப்பிற்கு தேவையான உதவிகளைப் பல வருடங்களாகத் தொடர்ந்து செய்து வருகிறார்.

இவர் கொங்கு நாடு அறக்கட்டளையின் அறங்காவலராகவும், KITCO அமைப்பின் புரவலராகவும், சிப்காட் பிள்ளைப்பாக்கம் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் செயலாளராகவும், வனம் இந்தியா பவுண்டேஷன் அறங்காவலராகவும், 2022 ஆம் ஆண்டு முதல் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், சங்கப் பணி மற்றும் சமுதாயப் பணிகளில் மிகச் சிறப்பாக ஈடுபட்டு வருகிறார். இவர் தற்போது மீண்டும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

**திரு. அ.நடராஜன்**



திரு. அ.நடராஜன் அவர்கள் 25-08-1974 ஆம் ஆண்டு திரு.எஸ்.அருணாச்சலம் - திருமதி. அ.முத்தம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவரது சொந்த ஊர் கோகலை கிராமம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டத்தில் உள்ளது. அவரது தந்தையார் திரு.எஸ்.அருணாச்சலம் அவர்கள் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஆவார். அவர் செங்கோட கவுண்டர் சன்ஸ் குழுமத்தின் நிறுவனர் ஆவார். திரு.எஸ்.அருணாச்சலம் அவர்கள் நமது சங்கத்தின் முதல் கட்டிடமான அம்மையப்பன் தெருவில் உள்ள தற்போது மகளிர் விடுதியாக இயங்கிவரும் கொங்குநாடு இல்லம் கட்டியதில் முக்கிய பங்காற்றியவர். திரு.நடராஜன் அவர்கள் NU-TECH Components நிறுவனத்தை அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நடத்தி வருகிறார். அந்த நிறுவனம் Automobile க்கு தேவைக்கான உதிரி பாகங்கள் மற்றும் Valve க்கு தேவையான உதிரி பாகங்களையும் மேலும் இன்ஜினியரிங்க தொழிலுக்கு தேவையான உபகணரங்களையும் செய்து வருகின்றார்.

மேலும் அவர்கள் 2021 ஆம் ஆண்டு முதல் கொங்குநாடு அறக்கட்டளையின் அறங்காவலராக செயலாற்றி வருகிறார். AIEMA Technology Centre எனும் சங்கத்திற்கு 2001-2003 செயற்குழு உறுப்பினராகவும், 2003-2004 ஆம் ஆண்டு பொருளாளராகவும் மற்றும் 2004-2005 ஆம் ஆண்டில் பொதுச்செயலாளராகவும் செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் B.E., (Industrial Engineering Management) என்கின்ற இளங்கலைப் படத்தை முடித்தவர். திரு.நடராஜன் அவர்கள் காரி கூட்டத்தைச்சேர்ந்தவர். அவரது மனைவி திருமதி. சசிரேகா ஆவார். திருமதி. சசிரேகா பள்ளிப்பாளையத்தில் உள்ள RK FABS நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரராக உள்ளார். திரு.அ.நடராஜன் - திருமதி. சசிரேகா தம்பதியருக்கு சர்வேஸ் என்ற மகன் உள்ளார். இவர் தற்போது 8ம் வகுப்பு படித்துக்கொண்டு வருகிறார். பொதுசேவையில் ஆர்வம் உடைய இவர் சென்னை கொங்குநண்பர்கள் சங்கத்தின் 2024-2026 ஆம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார்.

**திரு. எஸ்.ஜெகநாதன்** B.A.,



திரு.எஸ்.ஜெகநாதன் அவர்கள் **15–06–1957** ம் நாள் தயிர் பாளையம் ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த திரு. கே பி ஸ்ரீரங்கசாமி கவுண்டர் – திருமதி. எஸ் நல்லம்மாள் அவர்களின் மகனாகப் பிறந்தவர். இவர் கண்ணன் குலத்தைச் சேர்ந்தவர். இவரது குலதெய்வம் ஸ்ரீதேவி அம்மன் காஞ்சி கோவில்.

**1** முதல் **5** ஆம் வகுப்பு வரைக்கும் அரசு ஆரம்ப பள்ளி, தயிர் பாளையம் **6** முதல் **11** ஆம் வகுப்பு வரைக்கும் அரசு உயர்நிலைப்பள்ளி, பவானி. இவர் பவானியில் பள்ளிப்படிப்பை அரசு உயர்நிலைப் பள்ளி பவானி தங்கும் விடுதியில் தங்கிப் படித்தார். அந்த விடுதியில் முன்னாள் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவருடன் தங்கிப் படித்தார். இவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். மேலும் இவர் விவசாயி என்று சொல்வதற்கு பெருமைக்குறிய ஒன்று. இவர் இளங்கலை படிப்பை BA (எக்கனாமிக்ஸ்) ஈரோட்டில் உள்ள சிக்கியாநாயக்கர் கல்லூரியில் படித்தார்.

2007 இல் நம் கொங்கு சமுதாய ஒற்றுமைக்காகவும் அரசியல் அங்கீகாரம் பெறுவதற்காகவும் உயர்திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன் BE (கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முன்னால் செயலாளர் மற்றும் துணைத்தலைவர் ) அவருடன் பயணித்து ஈரோடு மாநகர மாவட்டச் செயலாளராக 10 வருடங்கள் மற்றும் தீரன் தொழில் சங்கத் தலைவராக 3 வருடமும். இப்பொழுது கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி மாநில அவைத்தலைவராக பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் 2011 ஆம் ஆண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு 330 உறுப்பினர்களை ஈரோடு மாவட்டம் சார்பாக சங்கத்திற்கு இணைத்துள்ளார். அந்த சேவைக்காக அவருக்கு அந்த வருடம் கொங்கு சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கடந்த மூன்று வருடங்களாக கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக உள்ளார். மேலும் தற்போது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் 2024–2026ஆம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினராகவும் மீண்டும் பொறுப்பேற்றுள்ளார். மேலும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் அவரால் முடிந்த பொது சேவைகளையும் சமுதாய பணிகளையும் ஆற்றிவருகிறார்.

## திரு. **கே.நித்தியானந்தன்**



கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் திரு. B.கிருஷ்ணசாமிக்கவுண்டர் - திருமதி. K.கார்த்திகேயனி ஆகியோருக்கு செங்கண்ணன் குலத்தில் 1972 ஆம் ஆண்டு மூத்த மகனாக பிறந்தார். உடன் பிறந்தோர் - தம்பி K.உமாசங்கர், தங்கை K.கௌரி ஆகியோருடனும் மனைவி N.வனிதா, மகள் V.N.சிவானி ஆகியோருடன் பொள்ளாச்சியில் வாழ்ந்து வருபவர்.

இவர் தனது பள்ளிப்படிப்பை பொள்ளாச்சி ஆரோக்கியமாதா மெட்ரிக்குலேசன் பள்ளியிலும், விஸ்வதீப்தி மேல்நிலைப்பள்ளியிலும் மற்றும் சமத்தூர் ராம ஐயங்கார் பள்ளியிலும் பயின்றார். மெக்கானிக்கல் இன்ஜினியரிங்கில் பட்டயப் படிப்பை (DME) 1990 ஆம் ஆண்டு பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியில் முடித்து பின் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பட்டப்படிப்பை (B.E.,) பெருந்துறை கொங்கு இன்ஜினியரிங் கல்லூரியில் 1994 ஆம் ஆண்டு முடித்தார்.

ஜின்னிங் தொழிலை தனது குடும்ப நிறுவனமான ஸ்ரீ ஆட்டுக்கிடா மில்லில் 1994 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை நடத்தி வந்தார்.

Sri Devkrish Group என்ற குடும்ப நிறுவனத்தின் கீழ்.

- Sri Devkrish Aqua Systems (Uutru Package Drinking Water Unit)
- Sri Devkrish Bharat Gas (LPG Distributor)
- Sri Devkrish Engineering Associates
- Keetru Farm Stay
- Crosswoods Holidays

ஆகியவற்றோடு தென்னை விவசாயத்தையும் தனது தம்பி K.உமாசங்கர் அவர்களின் துணையோடு நிர்வகித்து வருபவர்.

விவசாயம், தொழில் முன்னேற்றத்திற்காகவும், நம்முடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் காத்திடவும், தான் பிறந்த கொங்கு வேளாள சமுதாய முன்னேற்றத்திற்காகவும், பொள்ளாச்சியில் வாழும் அனைத்து சமுதாய மக்களின் நலன் காத்திடவும் சேவையாற்றி வருபவர்.

. 1997 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட பொள்ளாச்சி தாலுக்கா கொங்கு வேளாளர் இளைஞர் அணியின் செயலாளர்.

. 2013-2024 ஆம் ஆண்டு பொள்ளாச்சி ரோட்டரி சங்கத்தின் தலைவர்

. பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் பொள்ளாச்சி கிளையின் தலைவர்.

. பொள்ளாச்சி கொங்கு வர்த்தக மையத்தின் சேர்மன்

. பொள்ளாச்சி மாரியம்மன் தேர்த்திருவிழாக் குழுவின் துணைத்தலைவர்

. பொள்ளாச்சி பகுதி விவசாயிகளை ஒருங்கிணைந்து பொள்ளாச்சி பூர்ணா புரொடியூர் கம்பெனி லிமிடெட் என்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் (FPO) தலைவர்

. கொங்குநாடு மக்கள் தேசியக்கட்சியின் துணைப்பொதுச்செயலாளர்

. Southern Railway சேலம் கோட்டத்தின் DRUCC உறுப்பினர்

. பொள்ளாச்சி தொழில் வர்த்தக சபையின் செயற்குழு உறுப்பினர்

. பொள்ளாச்சி தமிழிசை சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்

. சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்

இவற்றோடு காராள வம்ச கலைச்சங்கத்தின் வழிகாட்டியாக இருந்து இந்தப் பகுதி பெண்களின் உடல்நலம், மனவளம் ஆகியவற்றைக் காத்து நம்முடைய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் பொருட்டு 5000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு வள்ளிக்கும்மி பயிற்சி வழங்க காரணமாக இருந்து வருபவர்.


## திரு. **விசா எம்.சண்முகம்**



கரூர், வாங்கல் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த அமரர் திரு.எஸ்.மருதமுத்து - அமரர் திருமதி விசாலாட்சி தம்பதியரின் மகனாக 1963 ஆம் ஆண்டுப் பிறந்தவர், திரு.விசா.எம்.சண்முகம். அந்துவன் கூட்டத்தைச் சேர்ந்த இவர், B.A. பட்டம் பெற்றவர். ஸ்ரீஅம்பிகா நிட்ஸ் என்ற தொழில் நிறுவனத்தை நடத்தி ஷேட், நெட், லினோ பேக்ஸ், இன்செக்ட் நெட்ஸ், டார்பாலின், மல்ஜில் சீட் போன்ற பிளாஸ்டிக் பொருட்களைத் தயாரித்து வருகின்றார். சமுதாயப் பற்று மிகவும் கொண்ட இவர், சமுதாய வளர்ச்சிக்கு முழு அர்ப்பணிப்போடு பணியாற்றி வருகின்றார். 1994 ஆம் ஆண்டு, கோவை செழியன் அவர்கள் கொங்கு வேளாளர் கவுண்டர் பேரவைத் தலைவராக இருந்தபோது கொங்கு வேளாளர் கவுண்டர் பேரவையின் மாநிலத் துணைப்பொதுச்செயலாளராகவும், 1996ஆம் ஆண்டு கரூர் நகர்மன்றத் துணைத்தலைவராகவும், 2001ல் கரூர் நகர் மன்ற உறுப்பினராகவும், 1998 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை கரூர் மாவட்ட இறகுப்பந்து கழகத் தலைவராகவும் பொறுப்புகள் வகித்து வருகிறார்.

தற்போது கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளையின் இணைச்செயலாளராக உள்ளார். இவருடைய மனைவி திருமதி. சாந்தி, இத்தம்பதியரின் மகள் திருமதி. சிந்து பைரவி B.Arch மருமகன் CAPT ஜே.மதன்குமார், மகன் கே.எஸ்.அஸ்வின் குமார் B.Com இவர் மகன் மேற்கண்ட தொழில் நிர்வாக இயக்கநராக உள்ளார். மருமகள் திருமதி. ரிதன்யா அஸ்வின்குமார், தற்போது செயற்குழு உறுப்பினராக நான்காவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## திரு. **எஸ்.குணசேகரன்**



திரு.எஸ்.குணசேகரன் அவர்கள் திருப்பூர் மாவட்டம் சோமனூரை சேர்ந்த திரு BRT சென்னியப்பன் திருமதி எஸ்.சுப்புலட்சுமி தம்பதிக்கு மகனாக 1974ஆம் ஆண்டு பிறந்தார். இவர் சேரன் குலத்தை சேர்ந்தவர். இவருடைய குலதெய்வம் கொடுமணல் அருள்மிகு தங்கம்மன் திருக்கோயில் ஆகும்.

இவரது மனைவி திருமதி ஜி. ஸ்ரீவித்யா. இத்தம்பதிக்கு ஜி. நித்தேஷ் கிருஷ்ணா, ஜி. ஜெயதேவ் என்னும் இரு மகன்கள் உள்ளனர்.

திரு. எஸ். குணசேகரன் BRT Spinner Private Limited எனும் கம்பெனியின் உரிமையாளர் ஆவார். இவர் நூல் மற்றும் துணி உற்பத்தி தொழில் செய்து வருகிறார். இவரது தந்தை திரு BRT சென்னியப்பன் அவர்கள் 2010 ஆம் ஆண்டு முதல் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் துணைத் தலைவராகவும் மற்றும் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் அவை தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.

திரு. குணசேகரன் அவர்கள் தற்போது 2024–2026 செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## திரு. **டி.பி.நடராஜன்**



ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், வடக்கு தயிர்பாளையம் VMD பால் பண்ணை நிறுவனர் அமரர் T.N.பொன்னுசாமி கவுண்டர் - சின்னம்மாள் தம்பதியருக்கு மகனாக 13-08-1967 ஆம் ஆண்டு காளமங்கலம் கண்ணங்குலத்தில் பிறந்தவர் T.P.நடராஜன். இவரது மனைவி N.அகிலா. இவர்களுக்கு இரண்டு மகள்கள் சகானா மற்றும் சஞ்சனா. ஈரோடு சாந்தாங்காடு R.வேலுசாமி (முன்னாள் தலைவர் கொங்கு கலையரங்கம் ஈரோடு) அவருடைய இரு மகன்களுக்கும் தனது இரு மகள்களையும் மணமுடித்துகொடுத்து உள்ளார். இவரது மருமகன்கள் V.ஜெயந்த், v.ராகவேந்திரன் ஆவார்கள். இவர் விவசாயம். பைனான்ஸ், ரியல் எஸ்டேட் மற்றும் சித்தோட்டில் V.M.D. மஹால் என்ற திருமண மண்டபத்தினையும் நடத்தி வருகிறார்.

மேலும் இவர் நமது சங்கத்தில் 2010 ஆம் ஆண்டு தலைவராக பரணி பாலசுப்பிரமணியம் அவர்களும், துணை தலைவராக B.R.T.சென்னியப்பன் அவர்களும் இருந்த சமயத்தில் தீரன் சின்னமலை விருந்தினர் இல்ல கட்டிட பணிக்கு ரூபாய் ஒரு லட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளார். அது மட்டும் அல்லாமல் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு தற்போதைய செயற்குழு உறுப்பினராக உள்ள திரு.எஸ்.ஜெகநாதன் அவர்கள் மூலம் நிரந்தர 50 உறுப்பினர்களை உறுப்பினராகச் சேர்த்தார். இவர் கொங்கு சமுதாய பணி செய்வதில் மிகுந்த அக்கறை உள்ளவர். நமது சமுதாயத்தில் உள்ள மாணவர்களுக்கு அதிக கல்வி உதவி செய்துவருகிறார். இவர் தற்போது நமது பெருமை வாய்ந்த சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## திரு. டி.எம்.சிவபிரகாசம்



கோவை மாவட்டம், பேரூர் தாலுக்கா, தேவராயபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தெய்வத்திரு.இரா.மாணிக்கவாசகம், திருமதி. சுப்புலட்சுமி ஆகியோருக்கு மூத்த மகனாக 29-07-1966 ஆம் ஆண்டு ஆடகுலத்தில் பிறந்தவர் எம்.சிவபிரகாசம். இவரது தந்தையார் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் 14வது உறுப்பினர். இவரது மாமனார் தெய்வத்திரு. துரைசாமிகவுண்டர் ஆவார்கள். அவர் நமது கட்டிடத்தின் அலுவலக அறையை கட்டி கொடுத்துள்ளார். (திலீப்குமார் வாட்டர் சப்ளையர்ஸ்) இவரது மாமியார் திருமதி. செல்லம்மாள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் மூத்த உறுப்பினர், இவரது திருமணம் நமது சென்னை கொங்கு சங்கத்தின் மூலம் நிச்சயிக்கப்பட்டது. அவருக்கு இரு தம்பிகள் உள்ளனர். மனைவி திருமதி. சுதா மற்றும் மகன் எஸ்.தர்வின் ஆவார். செல்வன் தர்வின் சென்னையில் திரைத்துறையில் இருக்கிறார்.

இவர் விவசாயம், ரியல் எஸ்டேட் புகைப்பரிசோதனை நிலையங்கள் மற்றும் இஞ்சினியரிங் கன்சல்டிங் செய்து வருகிறார். மேலும் இவர் நமது சங்கத்திற்கு 2010 ஆண்டில் திரு.பரணி பாலசுப்பிரமணியம் தலைவராகவும் திரு. BRT சென்னியப்பன் துணைத்தலைவராகவும் இருந்த சமயத்தில் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கி உள்ளார். இவர் கொங்கு சமுதாயப் பணி செய்வதில் மிகுந்த அக்கறை உள்ளவர். நமது சமுதாயத்தை சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி செய்து வருகிறார். இவர் தற்போது நமது பெருமை வாய்ந்த சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

# வாழ்த்துகிறோம்



பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய
உயர்திரு. எஸ். அருணாசலம், முன்னாள் தலைவர்.
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் !


பிறப்பின் நகர்வு அற்புதமானது
ஒவ்வொரு முறை வரும் போதும்
மிகவும் அழகாகிறது.

90 –வது அகவையில்
அடியெடுத்து வைக்கும் தங்களுக்கு
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
தனது நெஞ்சார்ந்த "இனிய பிறந்தநாள்"
வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

நன்றி!

# சிலம்பொலி செல்லப்பன் இல்லத்திருமண விழா





சிலம்பொலி செல்லப்பனார் அவர்களது மகனும், நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பொருளாளருமான திரு.சி.கொங்குவேள் அவர்களின் மகள் யாழினி செல்லம் கொங்குவேள் திரு. சிவேஷ் செல்வகுமார் அவர்களின் திருமண விழா டிசம்பர் 5, 2024ம் ஆண்டு வியாழக்கிழமை அன்று சேலம் மாவட்டத்தில் மெய்யனூரில் உள்ள ஸ்ரீவரட்சுமி மஹாலில் சிறப்பாக நடைபெற்றது. மேலும் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்களும், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.எஸ்.மாதேஷ்வரன் அவர்களும் கலந்துக்கொண்டனர். சங்கத்தின் தலைவர் திரு.வீ.கே.செல்வக்குமார், துணைத்தலைவர் திரு.ஆர்.சண்முகவேல், செயலாளர் திரு.எம்.அமராபதி, இணைச்செயலாளர் திரு.சி.அரவிந்தன், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் திரு.டி.நடராஜன், திரு.எஸ்.சீனிவாசன் மற்றும் முன்னாள் தலைவர் திரு.வி.பி.செங்கோட்டுவேள் மற்றும் கொங்கு உறவினர்களும் கலந்துக்கொண்டனர்.


# சிலம்பொலி செல்லப்பன் இல்லத்திருமண விழா



















# கொங்கு நண்பர்கள் சங்கம்

(பதிவு எண் : 282/76)



**"கொங்கு நாடு இல்லம்"**
**27,** அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 044 - 4351 0460
Cell : 63839 85919




**"வெள்ளி விழா இல்லம்"**
**34,** சீனிவாசப்பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
Ph : 044 - 4351 0460
Cell : 63839 85919




**"தீரன் சின்னமலை மாளிகை"**
நெ.**72,** பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 044 - 4266 8046
Cell : 93815 45451

**E-mail : chennaikongu@gmail.com, konguchennai@yahoo.com**
**www.kongunanbargalsangam.com**
**Ph : 044 - 4351 0460, Cell : 63839 85919**

# மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 115 | ரித்திகா | பண்ணை | 19-08-1995 ரோகிணி | B.E., (EEE) | PGDM, Finance | நாமக்கல் 02.00 pm | 98480 18460 93481 55721 |
| 116 | K.C.ஆர்த்தி | கண்ணன் | 22-01-1996 அவிட்டம் | MIB., M.Sc., (Psychologist) | Psychologist | சேலம் 02.14 pm | 98469 97555 98429 33391 |
| 117 | J.பவித்ரா சுவாதி | செல்லன் | 10-11-1996 சுவாதி | MBBS., | P.G. - Preparing | தருமபுரி 05.50 pm | 94430 08456 |
| 118 | S.சக்திஸ்ரீ | பன்னை | 15-11-2000 புனர்பூசம் | B.Architect | Own Business | சென்னை 04.07 pm | 98418 38379 97104 30735 |
| 119 | B.ஹோவித்தா | கண்ணன் | 11-10-2001 புனர்பூசம் | B.Tech., (Aerospace) | Technical Analayst Bangalore | சேலம் 05.22 pm | 94455 06663 94440 28485 |
| 120 | K.A.துர்கா | காரி | 15-04-1996 உத்திராடம் | B.E., (EEE) | Studying (Govt. Exam) | திருச்செங்கோடு 09.30 pm | 94434 11677 94424 34489 |
| 121 | K.P.நிவேதித்தா | சாத்தந்தை | 16-09-1999 அனுஷம் | MBBS., | Doctor | சேலம் 05.39 pm | 94875 13557 |
| 122 | V.வர்ஷினி | காடை | 03-12-1998 ரோகினி | B.E., | HCL (Senior Regulatory Analayst) | ஈரோடு 03.51 pm | 99625 94369 98407 01626 |
| 123 | A.அனுருத்ரா | விளையன் | 02-02-2001 கார்த்திகை | B.E., (CSE) | Accenture, Chennai | நாமக்கல் 10.24 pm | 93844 47797 |
| 124 | S.ஹரினி | செல்லன் | 19-11-1997 புனர்பூசம் | B.E., (EEE) | IT, Chennai | சென்னை 12.55 am | 94450 57320 94441 16262 |

# மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 125 | S.ஐஸ்வர்யா | பனக்காடை | 21-08-2000<br>அஸ்வினி | BNYS<br>(Naturopathy) | Intership | ஈரோடு<br>07.20 am | 98942 60377<br>99946 93580 |
| 126 | S.கிருத்திகா | தூரன் | 01-11-1995<br>அவிட்டம் | BE., MBA., | Business Analayst<br>(Newyork) | சேலம்<br>08.33 am | 94437 07227<br>96003 37799 |
| 127 | B.ஷர்னித்தா | ஆந்தை | 19-05-2001<br>உத்திட்டாதி | BBA, LLB | Advocate | கோவை<br>04.45 am | 94444 04593 |
| 128 | K.மனோபாரதி | செம்பொன் | 27-09-1989<br>மகம் | B.E., M.Sc., (UK) | Business | ஈரோடு<br>06.15 pm | 73975 59230<br>94426 17125 |
| 129 | S.B.பிரேமலதா | பையிரன் | 27-05-1999<br>சுவாதி | M.Sc., (Maths) | Associate Business<br>Analayst | கோவை<br>07.55 pm | 99448 04414<br>86675 20460 |
| 130 | M.கீர்த்தனா | காடை | 28-05-1998<br>திருவாதிரை | M.Sc., (Fashion<br>Design) | Beauty Parlour | திண்டுக்கல்<br>03.04 pm | 98424 45945<br>86828 20900 |
| 131 | E.அனுப்ரியா | செம்பூத்தான் | 18-01-1999<br>திருவோணம் | B.Com., CA., | HISBC Bank | ஈரோடு<br>10.25 pm | 94436 15911<br>94429 97304 |
| 132 | Dr.சுவாத்தி<br>சென்னியப்பன் | காடை | 30-12-1996<br>மகம் | MBBS., | Doctor, AIMS<br>(Senior Resident) | லண்டன்<br>01.10 am | 98430 27287<br>99407 04232 |
| 133 | M.N.சரண்யா | தூரன் | 26-03-2001<br>ரேவதி | B.DS | Praticing<br>Studying | ஈரோடு<br>03.41 pm | 94441 86469<br>94456 89705 |
| | | | | | | | |

# மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 108 | கலைச்செல்வன் | மாடகுலம் | 06-03-1990 திருவாதிரை | B.E., (Mech) | கருவூலத்துறை நந்தனம் | கோவை 05.56 am | 99650 66424 63749 44118 |
| 109 | G.நவீன் | செங்குண்ணி | 29-08-1998 விசாகம் | B.E., (Mech) | Samsung India Pvt. Ltd. Associate - MRO | உடுமலைப்பேட்டை 05.30 pm | 93828 26482 72004 18867 |
| 110 | P.C.மதன்முரசொலி | மணியன் | 06-03-1985 மகம் | B.Sc.,MSW (Austraia) | அரசுப்பணி, தென் ஆஸ்திரேலியா | ஈரோடு 10.55 am | 89037 45968 94432 40030 |
| 111 | M.S.அருள் | மணியன் | 28-10-1996 கிருத்திகை | B.E., (Civil) | Procurement Oil & Gas Sector | ஈரோடு 05.30 am | 96880 56555 |
| 112 | J.கோகுல்சித்தார்தன் | ஓதாலன் | 27-04-1992 சதயம் | B.Tech. MBA., (USA) | Business Analayst Amazon (USA) | கோவை 03.47 pm | 93613 76777 99446 37444 |
| 113 | R.நந்தவிசாகன் | செம்பன் | 10-08-1995 திருவோணம் | B.Sc., (Visual Communication) | Advt. FIRM | சென்னை 07.13 am | 93821 90013 90942 02942 |
| 114 | S.அபிஷேக் | வெண்டுவன் | 13-01-1997 பூரட்டாதி | B.E. (CS) | P.W.C, Bangalore | ஈரோடு 06.03 am | 98428 80216 |
| 115 | Dr.K.மணீஷ்குமார் | செல்லன் | 05-08-1997 மகம் | MBBS (MD) Gen Medicine | Doctor | சென்னை 05.35 am | 94449 14999 99625 25746 |
| 116 | S.நவீன் | காரிகுலம் | 14-03-1998 அஸ்தம் | B.E., IMS (UK) | Business (MD) - Intermonet Construction | சேலம் 03.19 am | 94432 44288 94875 44288 |

# மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 117 | R.இளையரசன் | பயிரண் | 07-10-1995<br>உத்திரட்டாதி | MBBS.,<br>PG, (Ananthesia) | Doctor | தர்மபுரி<br>12.05 pm | 80569 70202<br>86672 53212 |
| 118 | N.அஸ்வின் ராஜ் | பூந்துறை | 08-04-1996<br>கேட்டை | B.Tech.,<br>IITM, M.S. (USA) | Engineer ASML<br>(USA) | ஈரோடு<br>03.31 pm | 99529 45968 |
| 119 | D.ஜெகதீஷ் | பண்ணை | 27-12-2000<br>உத்திராடம் | B.Tech.,<br>Mech. (MBA) | Manager<br>(Hettich-Marketing) | கோவை<br>04.10 pm | 98843 99035<br>99400 96819 |



## திரு. எஸ்.சீனிவாசன்



நாமக்கல் மாவட்டம், எளச்சிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.பி.செல்லப்பன் - திருமதி. இராஜம்மாள் தம்பதியருக்கு மகனாக 1972 ஆம் ஆண்டு பிறந்தார். திரு.எஸ்.சீனிவாசன் அவர்கள் காடை குலத்தைச்சேர்ந்தவர் இவருடைய குலதெய்வம் மாணிக்கம்பாளையம் கிராமத்தில் உள்ள அருள்மிகு அண்ணமார் ஸ்வாமி ஆகும். 2001 ஆம் ஆண்டு திருமதி. எஸ்.கவிதா அவர்களை மணமுடித்தார். திரு.எஸ்.சீனிவாசன் - திருமதி.எஸ்.கவிதா தம்பதியருக்கு கே.எஸ்.பிரவீன்ராஜ், எஸ்.சஞ்வீவ் ராஜ் என இரு மகன்கள் உள்ளனர். திரு.எஸ்.சீனிவாசன் அவர்கள் சென்னையில் Prim Drugs & Pharmaceuticals (I) Pvt.Ltd. என்ற நிறுவத்தை நடத்திக்கொண்டு வருகிறார். இவர் 2012 ஆம் ஆண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினராக இணைந்தார். பின்னர் சமுதாயப்பணிகளை பலஆற்றியும், சேவைகள் பல புரிந்தும் 2021 - 2024 ஆம் ஆண்டில் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றினார். மீண்டும் இவர் 2024-2026 ஆம் ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## திரு. என்.பி.இசையழகன்



சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுக்கா, தென்னங்குடி பாளையம் கிராமம், நைனாகவுண்டர் தோட்டம் அமரர் பழனிவேல் கவுண்டர் - திருமதி சௌந்தரம் தம்பதியருக்கு இளைய மகனாக 01-05-1968 ஆம் ஆண்டு பண்ணை குலத்தில் பிறந்தவர் N.P.இசையழகன், தந்தை விவசாயாக தொழில் செய்து வந்தார்கள். விவசாயக் குடும்பத்தில் பிறந்தாலும் கல்வியில் இவருக்கு இருந்த அதிக ஆர்வத்தைக் கண்டு இவரது தந்தை இவரை கல்வியில் நன்றாக ஊக்கப்படுத்தினார். இவரது மனைவி திருமதி. E.விஜயா இளங்கலை பட்டம் பயின்றவர். இவர்களுக்கு ஒரு மகள் V.E.ரபியா பட்ட கணக்காளருக்கு படித்துக் கொண்டிருக்கிறார். திரு. இசையழகன் பட்டயக் கணக்காளராகவும், வழக்கறிஞராகவும் உள்ளார். சென்னையில் இருபத்தைந்து வருடங்களாக Esai & Co என்ற பெயரில் தணிக்கையாளர்கள் நிறுவனத்தை நடத்தி வருகிறார்.

சென்னையில் கொங்குநாடு அரிமா சங்கத்தின் தலைவராகவும் அரிமா மாவட்டத்தில் மண்டல தலைவராகவும் இருந்துள்ளார். கொங்கு சமுதாயத்தில் உள்ள மாணவர்களுக்கு படிப்பதற்கும் அவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்படுவதற்கும் மிகவும் உறுதுணையாக இருக்கிறார். மேலும் Rotary Club லும் உறுப்பினராகவும் உள்ளார். இவர் கொங்கு சமுதாய பணி செய்வதில் மிகுந்த அக்கறை உள்ளவர். இவர் தற்போது நமது பெருமை வாய்ந்த சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## திரு. **ஆர்.கந்தகார்த்திக்**



சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டம் வனவாசி கிராமத்தை சேர்ந்த திரு க. ராஜாமணி திருமதி ரா. தமயந்தி தம்பதியினரின் மகனாக 1984–ஆம் ஆண்டு இவர் பிறந்தார்.

திரு ரா.கந்தகார்த்திக், சாத்தந்தை குலத்தை சேர்ந்தவர் ஆவார். இவருடைய குலதெய்வம் வெள்ளோடு ராஜாசுவாமி நல்லமங்கை அம்மன். இவரது மனைவி திருமதி க.மேனகா.இத்தம்பதியினருக்கு ஜியா என்ற மகளும் இனியவேல் என்ற மகனும் உள்ளனர்.

சென்னையை சார்ந்த இவர் RKG & SONS ASSOCIATES எனும் கம்பெனியின் உரிமையாளர் ஆவார். இவர் Environmental Projects Execution and Consultancy Services, EPC Contract Projects போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறார். இவரது தந்தை திரு க.ராஜாமணி அவர்கள் கடந்த 20 ஆண்டுகளாக கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், இணைச் செயலாளராகவும் மிகச் சிறப்பாக பணியாற்றியவர். திரு ரா.கந்த கார்த்திக் மீண்டும் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## திரு. **கதிர்வேல் கணபதியப்பன்**



கோவை மாவட்டம், அன்னூரைச் சேர்ந்த தெய்வத்திரு திரு.கணபதியப்பன் - திருமதி. கண்ணம்மாள் தம்பதியரின் இளைய மகனாக 1973 ஆம் ஆண்டு பிறந்தவர். மாஸ்டர் ஆப் டெக்னாலஜி (M.Tech) படித்த திரு. கதிர்வேல் சேட குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய குலதெய்வம் கோவை மாவட்டம், குரும்பாளையம் அருகிலுள்ள கன்னிப்பாளையத்தில் உள்ள வீரமாத்தி அம்மன் ஆகும். இவரது மனைவி முனைவர் பார்கவி மகாலிங்கம். கதிர்வேல் அமெரிக்காவில் பல ஆண்டுகாலம் மென்பொருள் இன்ஜினியராக பணியாற்றிவிட்டு தற்போது சென்னையில் ISSM Business School என்ற கல்வி நிறுவனத்தை நடத்திவருகின்றார் இவர் Rotary International என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பல்வேறு சமுதாய நற்பணிகளைக் கடந்த 15 ஆண்டுகளாக செய்து வருகிறார். இவர் Enterprising Elities அமைப்பின் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார்.

### திரு. கே.ஜி.ஜோதீஷ்வரன்



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தாலுக்கா, கல்குறிச்சி வெள்ளாளப்பட்டி கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட திரு.ஜோதிஸ்குமார், 27.04.1981 அன்று அத்தியப்பா குழுமம் மற்றும் நிறுவனங்களின் தலைவரும் நிறுவனருமான திரு.கே.ஏ.கணபதி மற்றும் திருமதி.கே.ஜி.கனகம் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவர் விழியன் குளத்தைச் சேர்ந்தவர். இவர் சேலத்தைச் சேர்ந்த ரம்யா ரவிச்சந்திரனை 06.06.2011 அன்று திருமணம் செய்தார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர், ஜெயந்த் 6 ஆம் வகுப்பு படிக்கிறார், ஹர்ஷாந்த் யூ.கே.ஜி. படிக்கிறார். ஜோதிஸ்குமார், சென்னை டான்போஸ்கோவில் பள்ளிப் படிப்பையும், ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியல் கல்லூரியில் யுஜி–பிஇ(ரசாயனப் பொறியியல்) மற்றும் அயோவா மாநிலப் பல்கலைக்கழகத்தில் பிஜி–எம்எஸ் (தொழில்துறை பொறியியல்) படிப்பையும் படித்தார். இவர் பல்வேறு துறைகளில் தனது அபாரமான அறிவிற்காக அன்புடன் அறியப்பட்டார். இவரது நல்ல தலைமைப் பண்புகளுக்காக அவர் தனது கல்லூரியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் அத்தியப்பா ரசாயனங்கள் மற்றும் குழும நிறுவனங்களின் இயக்குநராக உள்ளார்.

இவரது நிறுவனம் மருந்துகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், பட்டாசுகள், விவசாயத் தொழில்கள், பிற இரசாயனங்கள், பீங்கான்கள், சாயமிடுதல் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் தொழில்துறை இரசாயனங்கள் தயாரிப்பில் 40 ஆண்டுகளாக முன்னோடியாக உள்ளது. . அவர் 2005 இல் குடும்பத் தொழிலில் சேர்ந்தார். அவரது தொழில் திறன்கள் வணிகத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல உதவியது. அவரது நிறுவனமான அத்தியப்பா ஆர்கானிக் தயாரிப்புகள் 2016 ஆம் ஆண்டிற்கான சிறந்த தொழில்முனைவோர் விருதைப் பெற்றது. அவரது நிறுவனம் ஸ்ரீ தைரியலட்சுமி பாலிசாக்ஸ் பல்வேறு தொழில்துறை மற்றும் உள்நாட்டு தேவைகளுக்காக 35 ஆண்டுகளாக HDPE மற்றும் PP பைகள் துறையில் மிகப்பெரிய சாதனை படைத்துள்ளது. அவர் 2002 இல் கொங்கு நண்பர்கள் சங்கத்தில் சேர்ந்தார்.

இவர் தொழில் முனைவோர் சங்கத்தின் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டு முறை கமிட்டி உறுப்பினர்களில் ஒருவராகவும் இருந்தார். இவர் பல்வேறு தாழ்த்தப்பட்ட குழந்தைகளின் கல்விக்கு நிதியளிக்கிறார். தற்போது இவர் கொங்கு நண்பர்கள் சங்கத்தில் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## திருமதி. **பரமேஷ்வரி சின்னசாமி**



திருமதி எஸ்.ஜி.பரமேஸ்வரி ஈரோட்டைச் சேந்தவர், தொழிலதிபரும், முன்னாள் செயற்குழு உறுப்பினருமான திரு.எஸ்.பி.சின்னசாமி அவர்களின் துணைவியார் இவர். பட்டதாரியான இவர் புகழ்பெற்று விளங்கும் P & C கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (P) Ltd., நிறுவனத்தின் Executive Director ஆக உள்ளார். இவரது இரண்டு மகன்கள் திரு.சி.சிவக்குமார் மற்றும் திரு.சி.கீர்த்திசங்கர் எஞ்சினியரிங் படிப்பு முடித்துவிட்டுக் கட்டுமானப்பணியில் ஈடுபட்டுள்ளனர். மகள் செல்வி சி.சுவேதா பட்டப்படிப்பு முடித்து உள்ளார்.

இவரது நிறுவனம் தற்போது SPAC Terminal Marketing Complex என்ற பெயரில் விவசாய விளைபொருள் விற்பனையிலும், P&C Realty Promoters (P) Ltd., என்ற பெயரில் சென்னையில் பல அடுக்குமாடிகள் கட்டி விற்கும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளது.இவர் சென்னை முகப்பேர் கொங்கு பேமிலி கிளப்பின் செயலாளராக கடந்த மூன்று ஆண்டுகளாகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

சமுதாயப்பற்று, சமூக சேவையில் ஈடுபாடு மிக்க கொண்டுள்ள இந்தப் பெண் தொழில் அதிபர் தற்பொழுது செயற்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்றுள்ளார்.

## டாக்டர் **ஜி.சண்முகப்பிரியா**



திங்களுரை சேர்ந்த Dr.முத்துசாமி மற்றும் கோபிசெட்டிப்பாளையத்தை சேர்ந்த திருமதி. முத்துலட்சுமிக்கு தம்பதியருக்கு மகளாக 16-11-1977 அன்று சென்னையில் திருமதி. ஷண்முகப்பிரியா அவர்கள் பிறந்தார். DAV முகப்பேர் பள்ளியில் உயர்நிலை படிப்பை முடித்து இராமச்சந்திரா மெடிக்கல் காலேஜியில் சென்னையில் மருத்துவப் படிப்பை முடித்தார். சென்னையை சேர்ந்த திரு.அப்பாவு (Omega Transport) மற்றும் திருமதி. பார்வதி ஆகியோரின் மகனான திரு.குகன் அவர்களுடன் 2002ல்திருமணம் நடைபெற்றது. திரு.குகன் – திருமதி. சண்முகப்பிரியா தம்பதியருக்கு ஒரு மகள் உள்ளன.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் உறுப்பினராக இணைந்த காலம் முதல் இன்றுவரை சேவை செய்வதில் மிக்க ஆர்வம் உடையவர். இவர் தற்போது 2024-2026 ஆம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினராக பொறுப்பேற்று உள்ளார்.